வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 11.04.2025

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்–கல்வி உதவித் தொகை–பெண்கல்வி ஊக்கத் தொகை– மாணவர்கள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்ய தெரிவித்தல்– –வங்கி கணக்கு இல்லாத மாணவர்களுக்கு இந்தியன் போஸ்டல் வங்கியில் (Indian Postal Bank) புதிய கணக்கு தொடங்க அறிவுறுத்தல் – மாணவர்களுக்கு eKyc Verification செய்ய தெரிவித்தல்–சார்பு.

பார்வை:

1. இவ்வலுவலக கடித ந.க.எண்.3326/ஆ2/2024 நாள்:13.08.2024, 07.10.2024.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்: 27.09.2024, 29.10.2024, 18.11.2024, 04.12.2024, 02.05.2025, 07.04.2025
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.3918/ஆ2/2024 நாள்: 27.09.2024, 04.12.2024
4. பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.062956/எம்2/இ3/2024 நாள்: 01.04.2025

--------

வேலூர் மாவட்டம், அரசு/அரசு உதவி பெறும்/தனியார் பள்ளிகளில் பயிலும் கல்வி உதவித் தொகை, பெண்கல்வி ஊக்கத் தொகை பெற தகுதியுள்ள மாணாவர்களில் 3496 மாணவர்களின் வங்கிக் கணக்கில் உதவி/ஊக்கத் தொகை விடுவிக்க இயலாமல் NPCI Inactive நிலையில் உள்ளது.

எனவே, மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை சென்றடையும் வண்ணம் அந்தந்த பள்ளிகளில் பொறுப்பாசிரியர் ஒருவரை நியமனம் செய்து, மாணவர்கள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்யவும், ஆதார் சீடிங் செய்ய இயலாத மாணவர்களை புதிய இந்தியன் போஸ்டல் வங்கியில் (Indian Postal Bank) வங்கி கணக்கு (Aadhar seeded account) துவங்க அறிவுறுத்தப்பட வேண்டும்.

மேலும், ஆதார் அட்டை புதுப்பிக்காமல் இருக்கும் மாணவர்களை ஆதார் புதுப்பிக்க (Biometric Updation) அறிவுறுத்த வேண்டும் மற்றும் eKyc Unverified மாணாவர்களுக்கு, eKyc Verification மேற்கொள்ள TN Generic செயலி மூலம் மேற்கொள்ளவும். இதில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து மேற்குறிப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மாணவர்களின் விவரங்களை (ஆதார் சீடிங் செய்யப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்கள் உட்பட) EMIS வலைதளத்தில் சரியான பதிவுகள் மேற்கொண்டு, இம்மாத இறுதிக்குள் இப்பணிகளை முடித்து அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/தாளாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: மாணவர்களின் பெயர் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
வேலூர்.

பெறுநர்

சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/தாளாளர்கள், வேலூர்.

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை (பொ)/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
மாவட்டக் கல்வி அலுவலகம்
வேலூர்.
(தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது)

Scanned with OKEN Scanner